20th August 1960]

(இ) All nurses get night duty by turn, usually for one month at a time, the average ratio being one month night duty to 3-4 months day duty.

In hospitals with small staff the frequency of night duty is higher.

SRI S. M. ANNAMALAI : சார், இதை மாற்றி அமைக்க வேண்டுமென்று அவர்களிடமிருந்து கோரிக்கைகள் ஏதாவது சர்க்காருக்கு வந்ததா? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

THE HON. SRI M. A. MANICKAVELU : கோரிக்கை வந்ததாக தகவல் இல்லை. இதுமாதிரி சலுகை சில மாதத்திற்கு முன்பு கொடுக்கப்பட்டது. அதாவது வீக்லி ஆப் போன்ற சலுகை கொடுக்கப்பட்டது.

SRI K. ANBAZHAGAN : இந்த மேல் நர்ஸ்ஸாக இருப்பவர்களுக்கு வார விடுமுறை எதுவும் இல்லாத காரணத்தால், இப்போது அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற பணிகள் அதிக வேலை தருவதாக இருப்பதால், அரசாங்கம் இன்னும் அதிகமான சலுகை தருவதற்கு முன் வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆண் நர்ஸ்ஸுகளும், பெண் நர்ஸ்ஸுகளும் ஒரேவிதமான கடமைகளைச் செய்கிறார்கள். அவர்களுக்கு வீக்லி ஆப் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் இம்மாதிரி செய்கின்ற காரணத்தினால் எத்தனையோ லட்ச ரூபாய் இதற்காக செலவாகிறது.

SRI M. K. SOMASUNDARAM : நர்சுகளுக்கெல்லாம் டூடி இருக்கும் நேரத்தில் கிளாசும் வைத்துவிடுகிறார்கள். அதனால் அவர்கள் கிளாசுக்குப் போகமுடியாமல் ஆப்சன்ட் ஆகக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகையால் அவர்களுக்கு டூடியைக் குறைத்து கிளாசுக்கு போவதற்கு வகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதன் மூலக்கேள்வி ஸ்டாப் நர்ஸ்ஸுகளைப் பொறுத்தது. இப்பொழுது கனம் அங்கத்தினர் கேட்கும் கேள்வி மாணவர்களைப் பொறுத்தது.

Schools Re-organization Conferences

*337 Q.—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் 1960-ம் வருஷத்திலே எத்தனை நடைபெற்றன?

(ஆ) இம் மகாநாடுகளை நடத்தப் பிரயாசைப்படும் உபாத்தியாயர்களிலே சிறந்த தொண்டாற்றுபவர்களுக்கு பரிசுகளும் அத்தாட்சிப் பத்திரங்களும் கொடுப்பது பற்றி அரசாங்கத்தால் பரிசிலனை நடத்தப்பட்டு வருகிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Forty up to 4th May 1960.

(*b*) No, Sir.

Wattle-bark

* 338 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. SARATHI) கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த இராஜ்யத்தில் தோல் பதனிடுவதற்கு தேவையான (Wattle-barks) பட்டைகள் கிடைக்கின்றனவா ?

(ஆ) இந்தப் பட்டைகள் வெளியிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றனவா ?

(இ) காலாகாலத்தில் போதிய அளவு கிடைக்காததால் அந்தத் தொழில் பாதிக்கப்படுவதாக அரசாங்கத்திற்குத் தகவல் உண்டா ?

(ஈ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No, Sir.

(ஆ) Wattle-barks are imported from East Africa and other countries.

(இ) & (ஈ) It has been represented that the cultivation of wattle trees should be extended. The Government are taking suitable steps in this direction.

SRI V. SUBBIAH : இதுமாதிரி வாட்டில் பட்டை எல்லாம் பற்றாக்குறை இருப்பதினாலும், ஆவாரம்பட்டை அதிகமாக கிடைப்பதனாலும் ஆவாரம்பட்டையை அதிகமாக உபயோகப் படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது சென்னை ராஜ்யத்தில் ஆவாரம்பட்டை டான்னிங்கிற்கு உபயோகப்படுத்தப் படுகிறது.

Construction of bridges in Tiruturaipundi taluk

* 339 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லாவில் கள்ளிமேடு, வாண்டுவாஞ்சேரி கோஸ்டல் ரோடிலுள்ள இரு பாலங்களும் சாங்ஷனாகி பல ஆண்டுகளாகியும் இன்னும் வேலையேதும் துவங்காமலிருப்பதன் காரணமென்ன ? இவைகள் எப்போது துவங்கி எப்போது பூர்த்தியாகும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : *Kallimode Bridge.*—The contract was accepted finally on 11th March 1960 and preliminary arrangements are being made to commence the work shortly.